# இலங்கைக்கான
# ஒரு மக்கள் விஞ்ஞாபனம




மக்கள் பாராளுமன்றம்

# இலங்கைக்கான
# ஒரு மக்கள் விஞ்ஞாபனம்

## சட்டம் மற்றும் சமூக அறக்கட்டளையால் ஒருங்கிணைக்கப்பட்ட மக்கள் நாடாளுமன்றக் குழு

9 ஜூலை 2023

வரைவு:ரஜினி கமகே

தொகுத்தவர்:
சகுந்தலா கதிர்கர்மர்
சந்துன் துடுகல
அமலினி டி சாய்ரா
விதுர முன்சிங்க
சகுண எம் கமகே

அட்டை வடிவமைப்பு, படத்தொகுப்பு உருவாக்கம் ரூ தளவமைப்பு:
சங்கீத் மதுராவாலா

புகைப்படங்கள்:
சகுனா எம் கமகே
அமில உடகெதர

வெளியிட்டது

LAW & SOCIETY TRUST

சட்டம் ரூ சமூக அறக்கட்டளை
3, கின்சி மொட்டை மாடி,
கொழும்பு 08,
இலங்கை
தொலைபேசி:¸94 (0) 11 268 48 45
தொலைநகல்:94 (0) 112 268 68 43
இணையம்: றறற.டளவடயமெய.ழசப



# இலங்கைக்கான ஒரு மக்கள் விஞ்ஞாபனம்

## மக்கள் பாராளுமன்றம்

மக்கள் பாராளுமன்றம் என்பது 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளுக்குப் பதிற்செயற்பாடாற்றும் வகையில் நிறுவப்பட்ட பிரசைகள் வழிநடத்தும் ஓர் ஆலோசனை முன்னெடுப்பாகும். நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த பிரசைகளுடன் ஈடுபடுவதும் கலந்தாலோசிப்பதும் இந்த முன்னெடுப்பின் இலக்காகும். இந்த ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கான பதிற்செயற்பாடாக உருவாகி அரசியல் பொறுப்புக்கூறலைக் கோரிய மக்களின் எதிர்ப்புப் போராட்டங்கள், 2022 ஏப்ரல் 9 ஆம் திகதி முதல் காலிமுகத்திடலில் உள்ள ”கோட்டாகோகமவில்” மிகப் பாரியளவில் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் தொடர்ச்சியாக பதுளை, காலி, குருநாகல் மற்றும் கண்டி போன்ற மாவட்டங்களில் ஏனைய கோட்டாகோகம போராட்டத் தளங்கள் அமைக்கப்பட்டன.

பிரசைகளின் ஈடுபாட்டிற்கும் பொதுமக்களின் அபிப்பிராயங்களிற்குமான ஒரு பகிரங்கமான மற்றும் கலந்தாராய்விற்கான வெளியாக மக்கள் பாராளுமன்றம் செயற்படுகின்றது. முதல் இரண்டு கூட்டத்தொடர்கள் 2022 ஏப்ரல் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் கொழும்பு கோட்டாகோகமவில் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்த மக்கள் பாராளுமன்றக் கலந்தாலோசனைகள், மே 2 ஆம் திகதி காலியிலும் ஜூன் 3 முதல் 6 வரை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மற்றும் வவுனியா உள்ளிட்ட வட மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுபான்மை சமுதாயங்களுடனும் உடப்புசல்லாவை, நுவரெலியா, தலவாக்கலை மற்றும் மஸ்கெலியாவில் உள்ள பெருந்தோட்டத் துறைச் சமூகங்களுடன் ஜூன் மாதத்தின் பிற்பகுதியிலும் மற்றும் ஆகஸ்ட் 5 முதல் 8 வரை வடமத்திய மாகாணத்தின் பொலன்னறுவை மற்றும் ஹிங்குராக்கொடை அத்துடன் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் உள்ள விவசாய சமுதாயங்கள், போர் விதவைகள், பெண் செயற்பாட்டாளர்கள் மற்றும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாயங்களுடனும் நடத்தப்பட்டன. பேஸ்புக், ட்விட்டர், இன்ஸ்டாகிராம் மற்றும் யூடியூப் போன்ற சமூக ஊடகத் தளங்களில் இந்த தனிப்பட்ட அமர்வுகளின் உள்ளடக்கத்தைப் பகிர்ந்து கொள்ளும் மக்கள் பாராளுமன்றம், இணையவழியிலும் அதன் இருப்பைக் கொண்டுள்ளது. கூகிள் (புழழபடந) படிவத்தின் மூலம், நெருக்கடி மற்றும் முன்னோக்கி செல்லும் வழி குறித்த பொதுமக்களின் அபிப்பிராயங்கள் சேகரிக்கப்பட்டன.






# மக்கள் சாசனங்கள்

மக்கள் எதிர்நோக்கும் மிக முக்கியமான பிரச்சினைகளையும் மற்றும் தற்போது நிலவும் தேசிய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பரிந்துரைக்கப்படும் சீர்திருத்தங்கள் எவை என்பதையும் அடையாளம் கண்டு ஆவணப்படுத்துவதே மக்கள் பாராளுமன்றத்தின் குறிக்கோளாகும். இச்சாசனங்களைப் பிணைக்கும் நீண்டகால, நடைமுறைச்சாத்தியம் மிக்க விஞ்ஞாபனம் கீழே தரப்பட்டுள்ளது.

## மக்கள் பாராளுமன்ற கூட்டங்கள்

- 12 மற்றும் 13 ஏப்ரல் 2022-கோட்டாகோகம காலி முகத்திடல் பசுமை ஆக்கிரமிக்கப்பட்ட எதிர்ப்புத் தளம்
- 2 மே 2022-கோட்டாகோகம காலி மாவட்டம் ஆக்கிரமிக்கப்பட்ட போராட்ட இடம்
- ஜூன் 3, 2022-மன்னார் மாவட்டம் (முள்ளிக்குளம் மற்றும் சிலாவத்துறையில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகக் குழுக்கள்)
- 4 ஜூன் 2022-யாழ்ப்பாணம் மாவட்டம் (ஐடிபிகள், மீனவ சமூகங்கள், பெண்கள் குழுக்கள், கூட்டுறவு பிரதிநிதிகள்)
- 5 ஜூன் 2022-கிளிநொச்சி ஏரு முல்லைத்தீவு மாவட்டங்கள் (போரில் பாதிக்கப்பட்ட ஏரு மீள்குடியேற்றப்பட்ட சமூகங்கள்)
- 22 மற்றும் 23 ஜூன் 2022 பெருந்தோட்டத் துறை (உடபுஸ்ஸல்லாவ, தலவாக்கலை ஏரு மஸ்கெலியா)
- 05 ஆகஸ்ட் 2022 பொலன்னறுவை மாவட்டம் (நுண்நிதி கடன் நெருக்கடி மற்றும் உரப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட ஹிங்குராங்கொட மற்றும் லங்காபுர விவசாய சமூகங்கள்)
- 07 ஆகஸ்ட் 2022 மட்டக்களப்பு மாவட்டம் (திருப்பெருந்துறை மகளிர் குழுக்கள் மீன்பிடி, விவசாயம் மற்றும் வீட்டுத் தொழில்கள்)
- 08 ஆகஸ்ட் 2022 அம்பாறை மாவட்டம் (பொத்துவில் மற்றும் அக்கரைப்பற்று நில அபகரிப்பு பிரச்சினைகளை எதிர்நோக்கும் சமூகங்கள்)
- குயஉநடிழழம, வுறவைவநச, ஐளெவயபசயஅ போன்றவற்றின் மூலம் ஆன்லைன் பின்னூட்டம்



# 1. ஒரு பன்மைவாத, சமத்துவ சமூகம்

1.1 அதிகாரப்பகிர்வு, இன ஒருமைப்பாட்டுக் கொள்கைகள் போன்றவற்றின் ஊடாக, சமுதாயங்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கத்துடன், இனப்பிரச்சினையில் எட்டப்பட வேண்டிய விடயங்களின் மையத்திலிருந்து ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

1.2 சட்டத்தின் ஆட்சியின் மூலம் இன-மத, மொழி மற்றும் ஏனைய விளிம்புநிலை சமுதாயங்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாத்தல்.

1.3 "இனப்பிரச்சினை" மற்றும் அமைப்பு ரீதியான இனவாதத்தின் வரலாறு குறித்து பிரசைகளுக்கு அறிவூட்டல்.

1.4 வெறுப்புப் பேச்சு மற்றும்/அல்லது இன-மத வன்முறையைத் தூண்டுதல் ஆகியவற்றைத் குற்றச்செயலாக்குவதற்கான விகிதாசார சட்ட நடவடிக்கைகள்.

1.5 மத சார்பற்ற அரசியலின் நிறுவனமயமாக்கல், உ.தா., மதங்களுக்கிடையிலான சகவாழ்வுக்கான மக்கள் ஒற்றுமைச் சபை.

1.6 உரிமைகள் மற்றும் அடிப்படை சமூக சேவைகளுக்கான அணுகல் ஆகியவற்றிற்கு அமைவாக நாட்டின் அனைத்து பிரசைகளுக்கும் சட்டம் சமமாக பிரயோகிக்கப்பட வேண்டும்.

1.7 பிரசைகளின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய கல்வி.

1.8 பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல் மற்றும் சுதந்திரமான மற்றும் பக்கச்சார்பற்ற ஊடக செயற்பாட்டை உறுதி செய்தல்.

1.9 பொலிஸ் மற்றும் ஆயுதப்படைகள் நடுநிலையான முறையொன்றில் தொழிற்படுவதையும், அவர்களின் தொழில்முறை எல்லைகளுக்குள் இருப்பதையும் உறுதி செய்தல்.

# 2. மோதல்கள் மற்றும் வரலாற்றுரீதியான அநீதிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி

2.1 அனைத்து பிரசைகளின் மனித உரிமைகளும் அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ளன.

2.2 மோதலினால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அவை நடவடிக்கைகளால் உறுதி செய்யப்படுகின்றன.

2.3 இனவாதத்தை நிறுவனமயப்படுத்தும் மற்றும் ஆட்சியை இராணுவமயமாக்கும் அரசாங்கக் கொள்கைகளை, விசேடமாக மோதலுக்குப் பின்னரான பகுதிகளில், மாற்றியமைத்தல்.

2.4 சிறுபான்மையினரையும் அரசியல் அதிருப்தியாளர்களையும் தன்னிச்சையாகக் கைது செய்து அச்சுறுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல்.

2.5 அமைதியைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்க செயன்முறைகளை மேல் மட்டம் முதல் அடிமட்டம் வரையும் அடிமட்டம் முதல் மேல்மட்டம் வரையும் வலுப்படுத்துதல். இது கடந்த கால நடவடிக்கைகளுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளல் மற்றும் போரின்போது அட்டூழியங்களை மேற்கொண்ட நபர்கள் மீதான வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

2.6 மோதல்களினால் காணாமல் ஆக்கப்பட்டோரின் நிலையை அறிவித்து அவர்களின் குடும்பங்களுக்கு நீதி மற்றும் இழப்பீடுகளை வழங்குதல்.




OMP
நல்வரவு
NO MORE DISAPPEARANCES
NO MORE DISAPPEARANCES
NO MORE

# 3. மக்களின் மற்றும் மக்களுக்கான ஒரு பொருளாதாரம்

3.1 பகிரங்க நிதி முகாமைத்துவம் மிகவும் வெளிப்படையானதாகவும், பங்கேற்புடையதாகவும், பொறுப்புக்கூறக்கூடியதாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் மற்றும் ஒப்புரவுடையதாகவும் இருக்க வேண்டும்.

3.1. 1பிரதானமான தேசிய அபிவிருத்தி முடிவுகள் அதிக பிரசித்தமாக மற்றும் பொதுமக்களின் ஈடுபாட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டும், உ.தா., அது அத்தியாவசியமானதா மற்றும் பிரசைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றதா, அது உள்நாட்டிலுள்ள சமுதாயங்களை எவ்வாறு பாதிக்கின்றது. தற்போது, நாட்டின் ஒவ்வொரு பிராந்தியத்தின் பல்வேறு தேவைகளுக்கு ஏற்ற அத்தியாவசிய அபிவிருத்தி முன்னெடுப்புகள் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் ஏனைய அனைத்து மூலதனச் செலவினங்களும் நிறுத்தப்பட்டு உடனடி வறுமை ஒழிப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை நோக்கி திருப்பிவிடப்பட வேண்டும்.

3.1.2 களவாடப்பட்ட பகிரங்க நிதியை மீட்பதற்கான வழிகளைப் பின்தொடர்தல் மற்றும் முன்திகதியிட்டும் இலங்கையில் அல்லது ஒரு வெளிநாட்டு நியாயாதிக்க எல்லையிலும் உள்ளடங்கலாக குற்றம் நிரூபிக்கப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடருதல்.

3.1.3 சமூக-பொருளாதார சமத்துவமின்மை களைக் குறைக்கும் பொறுப்புடன் பொதுமக்களுக்கு குறிப்பான பின்னூட்டத்தை வழங்கும் முற்போக்கான மற்றும் வெளிப்படையான வரி விதிப்புமுறைகளை நடைமுறைப்படுத்தல். உ.தா., இந்தியாவின் ஆதார் அட்டை முறை

3.1.4 மூலோபாய ரீதியாக தேசிய நலன்களை சமநிலைப்படுத்தவும் பாதுகாக்கவும் கூடிய வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நோக்கியதாக நாடுகளுடன் சிறந்த வெளிநாட்டு உறவுகளைப் பேணுதல்.

3.1.5 பகிரங்க நிதி தொடர்பான மிகவும் கடுமையான, வழமையான மற்றும் வினைத்திறன் மிக்க கணக்காய்வு, கொள்கை மீளாய்வு மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல், உ.தா. அரச நிறுவனங்களை மேற்பார்வையிடுவதற்கு ஒரு நிரந்தர கண்காணிப்பு ஆணைக்குழுவைத் தாபித்தல் பிரதான தேசிய முடிவுகளை மேற்கொள்வோர் தகுதித் தகைமைகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்யும் சட்டங்களை நிறைவேற்றுதல்.

3.1.6 உத்தியோகபூர்வமான, பக்கச்சார்பற்ற இடர் மற்றும் சுழுஜ மதிப்பீடுகள் மற்றும் மக்கள் கருத்துக் கணிப்புகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்ட பின்னர், பெறப்படும் தேசியக் கடன் தொகைக்கான வரையறைகளுடன், தேசிய கடன் பெறுகையை இயலச் செய்யும் சட்டங்களைஇயற்றுதல







## 3.2. உள்நாட்டு அபிவிருத்திக் கொள்கைகள் மக்களை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

3.2.1 சமூகப் பாதுகாப்புப் பொறிமுறைகள் மக்கள் தொகையில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதுடன் சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் சமநிலைப்படுத்தவும் வேண்டும்.
அரச மானியங்கள் சுகாதாரம், கல்வி மற்றும் விவசாயத் துறைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

3.2.2 பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்கான மூலோபாயமானது தொழிலாளர் வர்க்கத்தையும் மற்றும் சமூகத்தின் பொருளாதார ரீதியாக ஓரங்கட்டப்பட்ட துறைகளையும், சுற்றாடலையும் இலக்காகக்கொண்டு அவற்றை மையப்படுத்த வேண்டும்.

3.2.3 நுகர்வுப் பொருளாதாரத்தை விட மக்களை மையமாகக் கொண்ட உற்பத்திப் பொருளாதாரம் ஒன்றினை ஆதரிப்பதன் மூலம் மிகவும் நிலையான, உற்பத்தி அடிப்படையிலான உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு அரசாங்கக் கொள்கைகள் முன்னுரிமை வழங்க வேண்டும்.

3.2.4 உள்நாட்டின் நலன்களை சிறப்பாக பூர்த்தி செய்வதற்காக கூட்டுறவு போன்ற கூட்டுப் பொறிமுறைகளை புதுப்பித்தல் அல்லது தாபித்தல்.

3.2.5 இடைத்தரகர்களின் அதியுச்ச சுரண்டலுக்கு விவசாயிகள் ஆளாகாமல் இருப்பதைக் கொள்கைகள் உறுதி செய்ய வேண்டும்.

3.2.6 உலகளாவிய டிஜிட்டல் சேவைகள் மற்றும் தளங்களை அணுகுவதற்கு இளைஞர்களின் தொழில்நுட்ப கல்வியறிவை மேம்படுத்துதல் உள்ளடங்கலாக, பொருளாதாரக் கொள்கைகள் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளை கிடைக்கச் செய்ய வேண்டும். உ.தா., ஏற்றுமதித்
துறையின் பொருளாதார உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.

3.2.7 வாழ்வாதாரத்திற்கான உரிமையை உறுதி செய்தல் மற்றும் எந்தவொரு பொதுவான தேசிய குறைந்தபட்ச நிகழ்ச்சித் திட்டத்திலும் வாழ்வாதார உருவாக்கத்திற்கான வழிவகைகளை மேம்படுத்துதல்.

# 4. காணி உரிமை மற்றும் இயற்கை வளங்களுக்கான ஒப்புரவான அணுகல்.

4.1 காணி மீள் விநியோகத்திற்கான ஓர் உகந்த பொறிமுறையை விருத்தி செய்தல்.

4.2 காணி மற்றும் பிறப்பிடங்களுக்கான உரிமையை உறுதிப்படுத்துதல், உ.தா.இ முன்னர் மோதல் இடம்பெற்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள், தனியார் காணிகளை ஆக்கிரமித்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இராணுவத்தினரால் அந்தக் காணிகளுக்கான அணுகல் தடுக்கப்படுவதாக அறிக்கையிட்டனர்.

4.3 உள்நாட்டு வாழ்வாதார ஆதாரங்களுடன் பிரிக்கவியலாத வகையில் பிணைக்கப்பட்டுள்ள இயற்கை வளங்களுக்கு ஒப்புரவான அணுகலை உறுதி செய்தல்.




POLICE



# 5. ஒரு மக்கள் ஜனநாயகம்

**பின்வருவனவற்றைப் போன்ற அரசியல் மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்தல்:**

5.1 அரச பதவிக்கான உரித்துக்கள் மற்றும் அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கான வரையறைகள்.

5.2 அரசியல் பிரதிநிதிகளுக்கான தொழில்சார் தராதரங்கள், உ.தா., சரிபார்க்கப்பட்ட கல்வித் தகுதிகள், வயதெல்லை, பாராளுமன்றத்தில் சேவையாற்றுவதற்கான ஓர் ஆகக்கூடிய பதவிக்கால எல்லை, உறவினர் ஆதிக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகள், அரச பதவியினுள் நுழைவதற்கு விரும்பும் அரசியல் பிரதிநிதிகளின் ஏதேனும் கடந்தகால தவறான நடத்தை குறித்த வெளிப்படைத்தன்மை.

5.3 தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை பொறுப்புக்கூறச் செய்தல் மற்றும் தேர்தல் ஆணைகளுக்கு சட்டரீதியாக கட்டுப்பட்ட பொறிமுறையை உருவாக்குதல்.

5.4 அரசியலமைப்பின் (2015 ஆம் ஆண்டின்) 19 ஆவது திருத்தத்தை மீளமைத்து மேம்படுத்தல். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரத்தை கட்டுப்படுத்துதல் அல்லது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்துவிட்டு ஒரு முழுமையான பாராளுமன்ற முறைமைக்கு திரும்புதல்.

5.5 வலுக் குழுக்கள் மற்றும் மக்களை மையமாகக் கொண்ட ஏனைய பேரவை முன்னெடுப்புகள் ஆகியவற்றின் மூலம் அரசாங்கத்தைப் பொது நலன்களுக்கு பொறுப்புக்கூறச் செய்வதற்குப் பாராளுமன்ற எதிர்க்கட்சிக்கு வலுவூட்டல்.

5.6 நடப்புப் பாராளுமன்றப் பதவிக்காலம் ஒன்றின்போது அரசியல் கட்சி உறுப்பினர்களின் கட்சித் தாவல்களைத் தடுத்தல்.

5.7 தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் வாக்காளர்களுக்கும் இடையிலான அனுசரணையாளர்-வாடிக்கையாளர் உறவுகளை தடை செய்தல்.

5.8 அரசியல் கட்சிகளைக் கணக்காய்விற்கு உட்படுத்தல் மற்றும் பிரசாரங்களுக்கான நிதியளிப்பு போன்ற விடயங்கள் மீதான தேர்தல் மறுசீரமைப்புகளை நிறைவேற்றுதல்.

5.9 அனைத்து அரசியல் பிரதிநிதிகளும் பிரசாரம் செய்யும்போது அல்லது பொதுப் பதவிக்கு நியமிக்கப்படும் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை பிரகடனம் செய்யுமாறு சட்டத்தின் மூலம் ஆணையிடுதல்.

5.10 தன்னிச்சையான, தகுதியற்ற மற்றும் ஆதரவால் தூண்டப்படும் அரசியல் நியமனங்கள் தடுக்கப்படுவதற்காக, (தேசிய பட்டியல் ஊடாக நுழைபவர்கள் உட்பட) பாராளுமன்ற உறுப்பினர்களை பெயர் குறித்து நியமிக்கும் செயன்முறையில் அரசியல் கட்சிகள் குறுக்கிடு கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

5.11 பழிவாங்கல்கள் அல்லது பாகுபாடு குறித்த அச்சம் எதுவுமின்றியும் அத்துடன் பின்னூட்டங்கள் மீது வினைத்திறனுடனும் சுயாதீனமாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்னும் உத்தரவாதத்துடனும் பிரசைகள் முறைப்பாடுகளை அளிக்கக்கூடிய அல்லது வேறு பின்னூட்டங்களை வழங்கக்கூடிய பயனுறுதி மிக்க வழிவகைகளைத் தாபித்தல்


PRESS
53 DIV RHQ
ARMY
HOME

# 6. உள்ளடங்கலான ஆளுகை.

6.1 தேசிய மற்றும் பிரதேச மட்டங்களிலான ஆளுகையில் இளைஞர்கள், பெண்கள், இயலாமையுடைய நபர்கள், சிறுபான்மையினர், விவசாயிகள், தொழிலாளர் வர்க்கத்தினர் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏனைய சமுதாயத்தினர் ஆகியோரின் அதிக பிரதிநிதித்துவத்தை துடிப்பான ஒருங்கிணைப்புடன் கொண்டிருத்தல்.

6.2 மூடிய மற்றும் சிறிய குழுக்களில் உருவாக்குவதைக் காட்டிலும் கருத்தொருமிப்பு மற்றும் மக்களுடனான கலந்தாலோசனை என்பவற்றின் மூலம் தேசியக் கொள்கையை உருவாக்குதல்.

6.3 அரசியல் கட்சி பேதமின்றி அனைத்து அரசாங்கங்களும் கடைப்பிடிக்கும் ஒரு தேசிய கொள்கையை உருவாக்கி, இந்தியாவின் செனட் அல்லது ஒரு தேசிய அரசுப் பேரவை போன்ற ஒரு நிறுவனத்தைத் தாபித்தல்.

6.4 ஆளுகையில் சிவில் சமூகம் மற்றும் ஏனைய குழுக்களின் வகிபங்கை அதிகரித்தல். ஒரு செயல் விளைவை உள்வாங்கி உருவாக்குவதற்கான ஒரு கூட்டுப் பொறிமுறையை உருவாக்குதல்.



# மக்கள் பரிந்துரைகளின் கதைகள்

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் மற்றும் அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் நடைபெற்ற மக்கள் பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒன்றில், பாரியளவிலான வர்த்தக விவசாயம், தொல்பொருளியல் மற்றும் வனப்பாதுகாப்பு என்பன எவ்வாறு பிரதேச மக்களின் காணிகளின் பரவலாக ஆக்கிரமிப்பிற்கு வழிவகுத்துள்ளது என்பது பற்றிக் கிராம மக்கள் பகிர்ந்து கொண்டனர். தற்போது நிலவும் நெருக்கடியை சமாளிக்க உதவக்கூடிய வீட்டுப் பயிர்ச்செய்கை மற்றும் சிறிய அளவிலான உற்பத்திகளை மேற்கொள்வதில் உள்ள சவால்களையும் அவர்கள் பகிர்ந்து கொண்டனர், விவசாயிகளிடம் இருந்து குறைந்த விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்து மிக அதிக விலைக்கு விற்பனை செய்து இலாபம் ஈட்டிய அரிசி மாபியா மற்றும் இடைத்தரகர்களின் பிரச்சினை குறித்து ஹிங்குராக்கொடை விவசாயிகள் பேசினர். வளங்களுக்கு ஒப்புரவான அணுகலை உறுதி செய்வதும், அத்தியாவசியப் பொருட்களுக்கான நிலையான விலைகளைப் பேணுவதும் அரசின் பொறுப்பாகும். இதனால் பாரிய வெளிப்புற அரிசி ஆலை வர்த்தகங்களின் அதிகாரத்தைக் குறைத்துக்

வடக்கில் உள்ள சில சமுதாயங்கள், அடிப்படை அரச பணப் பரிமாற்றல்களை (தற்போது 5,000 ரூபாவாக உள்ளது) அதிகரிக்குமாறும் அவை உண்மையான வாழ்க்கைச் செலவை பிரதிபலிக்குமாறும் கோர வேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்தின. தற்போதுள்ள கிராமிய வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம், சமுர்த்தி மற்றும் பெருந்தொற்று மற்றும் நெருக்கடியின்போது மேற்கொள்ளப்பட்ட ஏனைய பணப் பரிமாற்றங்கள் என்பன தங்கள் சமுதாயங்களினுள் உள்ள தேவையுடைய அனைவருக்கும் ஒப்புரவான அடிப்படையில் விநியோகிக்கப்படவில்லை என உடப்புசல்லாவவில் உள்ள ஏனையோர் முறைப்பாடு தெரிவித்தனர்.

ஹிங்குராக்கொடை, பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பில் உள்ள விவசாய சமுதாயத்தினர், பாரம்பரிய விதைகளை எவ்வாறு உரத்தைப் பயன்படுத்தி (உள்நாட்டு அரிசி ஆலைகளிலிருந்து கிடைப்பவை போன்றன) பயிரிட முடியும் என்பது குறித்தும் இதற்கு அதிக நீர்ப்பாசனம் தேவையில்லை என்பது குறித்தும் தெரிவித்தனர். இது மிகவும் தன்னிறைவுடைய மற்றும் இணைத்திறவாழ்வுத் திறனுடைய முறையாகும் என்பதுடன் சிலர் இந்த விதைகளைத் தங்கள் வீடுகளில் உருவாக்குவதற்குத் தயாராகுதல் குறித்தும் பேசினர். இதற்கு நேர்மாறாக, அரசாங்கம் வழங்கிய கலப்பின விதைகளை பயிரிடுவது மிகவும் கடினம் எனவும், அதிக நீர் வழங்கல் மற்றும் இரசாயன உரத்தை அவை தேவைப்படுத்துவதாகவும் கூறப்பட்டது. உள்நாட்டு உணவு முறைகள் அவற்றில் அதிகம் தங்கியிருப்பதாலும் இந்தப் பொருளாதார நடவடிக்கைகள் பருவகால இயல்பைக் கொண்டிருப்பதாலும் எரிபொருள் விநியோகம் மற்றும் உர/விதை மானியங்கள் ஆகியவற்றில் விவசாயம் மற்றும் மீன்பிடியில் ஈடுபடுவோருக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டது.

அரசியலமைப்பு மறுசீரமைப்பு அத்துடன் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற நீண்டகாலமாகவுள்ள அநீதியான மற்றும் கடுமையான சட்டங்களை நீக்குதல் போன்றவை அல்லாத எந்தவொரு முறைமை மாற்றமும் மேலோட்டமானது மற்றும் தற்காலிகமானது என வடக்கில் உள்ள சமுதாயங்கள் வலுவாக நம்பின. மட்டக்களப்பு காத்தான்குடியில், 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் அச்சமுதாயம் எவ்வாறு எதிர்மறையான எதிர்வினையை எதிர்கொண்டது என்பது குறித்து அப்பிரதேசத்தின் பெண்கள் குழுவொன்று பேசியது. அவர்களின் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை பல ஆண்டுகளாக தடுத்து வைத்திருப்பதற்குப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அரசு பயன்படுத்தியிருந்தது. பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கான ஒரு பதிலீடாக, சந்தேகத்திற்குரிய நபர்களுக்கு அவர்களின் சமுதாயங்களில் வேலை வழங்கக்கூடியவாறான மற்றும் அவர்கள் சம்பாதித்த ஊதியத்தை அவர்களின் குடும்பங்களுக்கு அனுப்பக்கூடியவாறா சமுதாய அடிப்படையிலான சீர்திருத்தம் காணப்படலாம் என பிரதேசத்தில் வசிப்போர் பரிந்துரைத்தனர்.

ஒரு பாரிய பெருந்தோட்டத் தொழிற்துறையைக் கொண்ட உடப்புசல்லாவவில், நாளொன்றுக்கு 1,000 ரூபா குறைந்தபட்ச ஊதியத்திற்கான கோரிக்கைகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. பெருந்தோட்டத் துறைக்கு வெளியே, கட்டுமானம், முச்சக்கரவண்டி வாடகைக்கு அமர்த்தல் மற்றும் ஆடைத் துறைகள் போன்ற தொழில் வாய்ப்புகளுக்கான வழிகள் எவ்வாறு மூடப்படுகின்றன என்பது குறித்து பிரதேசவாசிகள் பேசினர். பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்களுக்குக் கூட தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளல் கடினமாக இருந்தது. நிரந்தர வேலைகளைக் கொண்டிருந்த அரச ஊழியர்கள் உட்படப் பலர் வாழ்வாதாரத்திற்காக இரண்டாவது வேலையை (மீன்பிடித்தல் போன்றவை) நாட வேண்டியிருந்தது என்பதைக் குறித்து மட்டக்களப்பில் உள்ள மகளிர் குழுக்கள் பகிர்ந்து கொண்டன. சிலர் மிகையாகக் கிடைத்த மீன்களை ஏனைய பொருட்களுக்குப் பண்டமாற்று செய்தனர். இது, ஒரு பரிமாற்ற ஊடகமாக பணத்தின் பெறுமதியைப் பணவீக்கம் எவ்வாறு குறைக்கின்றது என்பதைக் குறிப்பீடு செய்கின்றது. இத்தகைய சூழ்நிலைகளின் சமூக விளைவுகள், மனநலப் பிரச்சினைகள் மற்றும் போதைப்பொருள் பாவனை போன்றவற்றில் வெளிப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்த நெருக்கடி, விசேடமாக குறைந்த வருமானம் கொண்ட சமுதாயங்கள் மற்றும் பிராந்தியப் பாடசாலைகள் மத்தியில், மாணவர்களின் கல்விக்கான அணுகலை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை சமுதாயங்கள் பகிர்ந்து கொண்டன. இதன் விளைவாக, முன்னாள் மாணவர்கள் கஷ்ட நிலையிலுள்ள தங்களின் குடும்பங்களை ஆதரிப்பதற்காக வேலை வாய்ப்புகளைத் தேடுவதால், பாடசாலைகளில் இடைவிலகுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. உணவு மானியங்கள் மற்றும் இணையவழிக் கல்விக்கான தொழில்நுட்ப அணுகல் போன்ற உதவிகளை அரசு வழங்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் உள்ள சமுதாயங்கள்இ துரிதமாக அதிகரித்து வரும் உணவு மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களின் செலவுகளைத் தாங்க இயலாமை குறித்த விபரங்களை பகிர்ந்து கொண்டனர். ஏனெனில், அவர்களின் ஊதியங்களில் இதற்கு ஈடான அதிகரிப்பு மேற்கொள்ளப்படவில்லை. இது ஒரு நாளைக்கு மூன்று வேளை உணவைப் பெற்றுக்கொள்ள இயலாத நிலையில் பலரின் உணவு முறையைப் பாதித்துள்ளது. மீன், இறைச்சி மற்றும் காய்கறிகள் போன்ற புரதம், விற்றமின்கள், தாதுக்கள் போன்றவை அதிகம் உள்ள உணவுப் பொருட்கள் அரிதாகவும் மற்றும்/அல்லது மிகவும் விலை உயர்ந்தவையாகவும் இருப்பதால், உட்கொள்ளும் உணவு கூட பெரும்பாலும் ஊட்டச்சத்துக் குறைபாடுடையதாகக் காணப்படுகின்றது. இது புதிய தாய்மார்களையும் சிசுக்களையும் மிகவும் கடுமையாக பாதிக்கின்றது. அவர்களில் சிலர் உணவுப் பாதுகாப்பிற்கான ஒரு துரித அழைப்பு சேவையை அமைக்க வேண்டும் என ஆலோசித்தனர்.

பல சமுதாயங்களில் அடிப்படை வாழ்வாதார உட்கட்டமைப்பிற்கு நிதியளிப்பதற்காக வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்துவதில் காணப்படும் சிரமம் பற்றிப் பேசப்பட்டது. வீட்டில் உள்ள ஆண்களில் பலர் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்ததால், பெரும்பாலும் மற்றவர்களின் வீடுகளில் பராமரிப்பு வேலை, புல் வெட்டுதல் மற்றும் பிற உடல் உழைப்பு போன்ற நாளாந்த வேலைகளில் ஈடுபட்டிருந்த பெண்கள், குடும்பத்தில் வருமானம் ஈட்டும் ஒரே நபர்களாக மாறினர்.

பற்றாக்குறை மற்றும் அதிகரித்த வாழ்வாதார அழுத்தங்களுக்கு பதிலளிக்கும் விதமாக, விரிவுபட்ட குடும்பங்களுடன் இணைந்து வாழ்வது சமூக ரீதியான சமையல் மற்றும் வசதி குறைந்தவர்களுடன் உணவைப் பகிர்தல் போன்ற சமுதாயங்கள் ஒன்றிணையும் ஓர் அம்சம் காணப்பட்டதாக நேர்காணல் செய்யப்பட்ட பலரும் குறிப்பிட்டனர். மலையகப் பிராந்தியத்தில், பச்சைவீட்டு விவசாயம் மற்றும் வீட்டுத் தோட்டம் போன்ற சிறிய அளவிலான கூட்டு, வணிகத் தொழில்முயற்சிகளின் கதைகளை மக்கள் பகிர்ந்து கொண்டனர். மஸ்கெலியாவில் தோட்டத் தொழிலாளர்கள் அதிக சம்பளத்தைக் கோரி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டது மற்றும் தோட்ட நிர்வாகத்தை சமரசத்திற்கு வர நிரப்பந்தித்தது ஆகியவற்றின் வெற்றிக் கதைகளை அவர்கள் பகிர்ந்து கொண்டனர். ஹிங்குராக்கொடையில், பிரதேசவாசியான பெண் ஒருவர் தனக்கு எதிராக நுண் நிதி நிறுவனம் ஒன்றினால் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கை எவ்வாறு வென்றார் என்பது பற்றிய ஒரு கதை பகிர்ந்து கொள்ளப்பட்டது.

பொருளாதார நெருக்கடியால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறையில் உள்ள உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியிலுள்ள மீனவ சமுதாயத்தினரும் அத்துடன் முல்லைத்தீவ-ில் உள்ள சமுதாயத்தினரும் கூறினர். விவசாய நடவடிக்கைகளுக்கான டீசல் மற்றும் உரப் பற்றாக்குறை காரணமாக தங்களில் பெரும்பாலானோர் கால்நடைகளை வளர்க்க வேண்டிய நிலைக்கு மட்டுப்படுத்-தப்பட்டுள்ளதாக வட மாகாணத்திலும் மலையகத்திலும் உள்ள விவசாய சமுதாயத்தினர் வெளிப்படுத்தினர். பொலன்னறுவை, ஹிங்குராக்கொடையைச் சேர்ந்த விவசாயிகள், எரிபொருளின் அதிக விலை காரணமாக பல விவசாய நடவடிக்கைகள் உடலுழைப்பின் மூலம் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன என்பதைப் பற்றி பேசினர். இது கடினமானது என்பதுடன் உற்பத்திகளின் விலைகளிலும் இது ஈடுசெய்யப்படவில்லை. வேறு சில விவசாயிகள், தங்கள் விவசாய உழவு இயந்திரங்களை கியூஆர் குறியீட்டு எரிபொருள் ஒதுக்கீட்டில் பதிவு செய்வதில் எவ்வாறு சிரமத்தை எதிர்கொண்டனர் என்பதைப் பற்றி பேசினர்




GRENADE.HAND
ඉතිහාසය - 10 වන ශ්‍රේණිය
BOY
SRI LANKA




# தற்போதைய நெருக்கடி மற்றும் அரகலய மீதான புலனுணர்வுகள்

இலங்கையில் தற்போது நிலவும் நெருக்கடியின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று, அரசியல் முறைமையினுள் காணப்படும் ஆழமான ஜனநாயகப் பற்றாக்குறையாகும். நாளொன்றிற்கு ஒரு வேளை உணவு உண்பது முதல் எரிபொருள் அல்லது சமையல் எரிவாயுவைப் பெற பல நாட்கள் வரிசையில் நிற்பது வரை, கடுமையான சிரமங்களை மக்கள் அனுபவித்து வந்தாலும், அரசியல்வாதிகளுக்கு ஒத்துணர்வு காணப்படவில்லை எனவும், மக்கள் மீதான நெருக்கடியின் தாக்கத்தை குறைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அவர்கள் மேற்கொள்வதாகத் தெரியவில்லை எனவும் மக்கள் உணர்ந்தனர். குறுகிய கட்சி அரசியலின் சேதம் குறித்தும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இவை ஒரு சிலரின் நலன்களுக்கு சேவையாற்றும் குறுகிய நோக்குடைய கொள்கைகளாகவும், அடுத்த தேர்தலைக் கருத்தில் கொண்டு அரசியல்வாதிகளால் செயற்படுத்தப்படுபவையாகவும், மக்களுக்கும் சுற்றாடலுக்கும் தீங்கு விளைவிப்பவையாகவும் அமைந்தன.

நாடு முழுவதிலும் மக்கள் பாராளுமன்றக் கூட்டத்தொடர்களிலிருந்து சேகரிக்கப்பட்ட கருத்துக்களில் செய்தி தெளிவாகக் காணப்பட்டது. நெருக்கடி ஒன்றின்போது, உயிர்வாழ்வது ஒரு போராட்டமாகும் என்பதுடன் நாட்டின் நீண்டகால சீர்திருத்தங்கள் மற்றும் அபிவிருத்தியின் தேவை குறித்த கலந்துரையாடல்களையும் இது மட்டுப்படுத்தலாம். ஒரு சட்டபூர்வமான அரசாங்கம் முதலில் மக்களின், விசேடமாக சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரின், அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும். எனவே உடனடி நெருக்கடியைத் தீர்ப்பதிலும், பல்வேறு குழுக்கள் தங்கள் அதிகார நலன்களை ஒதுக்கி வைத்துவிட்டு, முன்னோக்கிய பாதையைத் திட்டமிடுவதில் ஒரு தேசமாக ஒன்றிணைந்து சிந்திப்பதிலும் பிரதான கவனம் செலுத்தப்பட வேண்டும். தற்போதைய நெருக்கடியின் வேர்களை அகற்றுவதற்கு தேசியத் தலைவர்கள் மற்றும் அரச ஊழியர்களிடையே ஓர் அக்கறையான மற்றும் தாழ்மையான மனப்பான்மை தேவைப்படுத்தப்படுகின்றது.

தேர்தல்களில் ஓர் அறிவார்ந்த தெரிவை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு ஒன்றினைக் கொண்ட வாக்காளர்களிடம் தவறுகளில் ஒரு பகுதி உள்ளது என்பதைப் பல்வேறு மக்கள் ஏற்றுக்கொண்டனர். பல வாக்காளர்கள் அரசியல் ஆதரவால் கொண்டு வரப்படுகிறார்கள் என்பதுடன் இந்த அரசியல் கலாசாரம் மிகவும் பொருத்தமான வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவதையும் தடுக்கின்றது. இது தற்போதைய நெருக்கடிக்குப் பல வழிகளில் வழிவகுத்துள்ளது. தற்போதுள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றுவதையே தற்போதைய மக்கள் போராட்டத்தின் இலக்காகச் சிலர் பார்த்தனர் ஏனையோர் அரசியல் கட்சி முறையை ஒழிப்பதற்கான வடிவத்தில் இந்த முறைமை மாற்றத்தை நோக்கினர். விரைவில் பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களுக்குச் செல்ல வேண்டியதன் அவசியமும் எழுப்பப்பட்டது. முறைமை மாற்றத்தை எந்த வழிமுறைகள் மூலம் பெறக்கூடியதாகவிருப்பினும், தற்போதைய நெருக்கடிக்கு தற்போதுள்ள முறைமையினுள் தீர்வு காண முடியாது என்பதால், அது மாற்றப்பட வேண்டியதன் அவசர நிலை குறித்த ஒருமித்த கருத்து நிலவியது. ஆயினும், அத்தகைய மாற்றம் இயல்பாகவே ஏற்படுவதற்கான சாத்தியம் இல்லாமையினால் முறைமை மாற்றத்திற்கான அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு மக்களை ஒன்றுதிரட்ட வேண்டியிருந்தது. சமூக ஊடகங்கள் சாதாரண பிரசைகளுக்கு ஒரு குரலையும் தளத்தையும் வழங்கி அவர்களை வலுவூட்டுவதனாலும், ஒவ்வொருவரும் தங்கள் சிறிய பங்கை இதற்கு வழங்க முடியுமென்பதுடன் இது கூட்டாகப் பாரிய அளவிலான மாற்றத்தையும் உருமாற்றத்தையும் தூண்டுவதனாலும், சமூக ஊடகங்கள் இந்த வழிமுறைக்கான ஒரு பயனுள்ள கருவியாக கருதப்பட்டன.




தெற்கில் இடம்பெற்ற வெகுஜனப் போராட்டங்கள் குறித்து வட மாகாணத்திலுள்ள சமுதாயங்களின் எண்ணங்கள் மற்றும் அபிப்பிராயங்கள் கேட்கப்பட்டபோது, உள்நாட்டுப் போரின் போதும் அதற்குப் பின்னரும் பெரும்பான்மை சிங்களவர்கள் தமிழர் உரிமைகளுக்காகப் போராடவில்லை என்ற ஓர் உணர்வு காணப்பட்டது. தமிழர்கள், விசேடமாக வடக்கு மற்றும் கிழக்கில் பல தசாப்தங்களாக அனுபவித்த பல துன்பங்களை பெரும்பான்மையான சிங்களவர்கள் இப்போது அனுபவித்திருப்பது துரதிரஷ்டவசமானது என்றபோதும், இது அனுபவப் பகிர்வு மற்றும் பொதுவான புரிதலின் ஒரு தருணமாகவேனும் அமைந்தது என அவர்கள் கூறினர். யுத்தத்தின் போது சமையல் எரிவாயு, மின்சாரப் பற்றாக்குறை போன்ற கடுமையான நிலைமைகளை சகித்துக் கொண்ட அவர்களுக்கு, தற்போதைய கஷ்டங்கள் புதிதல்ல. மோதலினால் பாதிக்கப்பட்ட இந்தப் பகுதிகளில் உள்ள சமுதாயங்களுக்கு, விசேடமாக இளைஞர்களுக்கு மேலதிக ஆதரவை வழங்குவது அரசின் பொறுப்பு என அவர்கள் வாதிட்டனர்.

காணிப் பிரச்சினைகள், இராணுவமயமாக்கல், வீடமைப்பு, இந்திய ஆழ்கடல் இழுவைப் படகுகள் மீன்பிடிப் பிரதேசங்களிற்குள் ஊடுருவுதல் போன்ற தமது பிரதேசங்கள் மற்றும் சமுதாயங்களுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், இந்த போராட்டங்களில் போதுமான அளவில் மையப்படுத்தவில்லை என உணர்ந்ததால் காலிமுகத்திடல் போராட்டத்தில் பங்கேற்கத் தாங்கள் விரும்பவில்லை என சிலர் விளக்கினர். வடக்கில் நீண்டகாலமாக மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் மாத்திரமே மக்களுக்குக் கிடைத்து வந்ததான உணவு, மின்சாரம் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களுக்கான அணுகலைப் பெறுவதற்காக தெற்கில் போராட்டக்காரர்கள் போராடுவதாக அவர்கள் தெரிவித்தனர். எனவே, வடக்கிலும் தெற்கிலும் உள்ள மக்களின் போராட்டங்கள் அடிப்படை ரீதியில் வேறுபட்டவை என்று அவர்கள் உணர்ந்தனர்.

ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு வாக்களித்து ஆட்சிக்குக் கொணடுவந்ததன் மூலம் தென்னிலங்கை மக்கள் தமக்குத் தாமே உருவாக்கிய ஒரு பிரச்சினைக்கான பதிற் செயற்பாடாக இந்த வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக ஏனையோர் தெரிவித்தனர். வடக்கில் அரச வன்முறைகளின் வரலாற்றுரீதியான அனுபவம் என்பது அமைதியான போராட்டங்களின் ஊடாக விடுதலையையும் நீதியையும் அடைய முடியும் என்று இங்குள்ள அனைவரும் நம்பவில்லை என்பதேயாகும் எனவும் சிலர் பகிர்ந்து கொண்டனர். கடந்த காலங்களில், தெற்கின் முற்போக்கு இயக்கங்கள் கூட அரசால் தோற்கடிக்கப்பட்டன அல்லது ஒருங்கிணைக்கப்பட்டன என்பதுடன் தற்போது அதிலிருந்து வேறுபட்ட ஒரு விளைவு ஏற்படுவதற்கான எந்த காரணத்தையும் அவர்கள் காணவில்லை.






சுதந்திரத்திற்கான அவர்களின் நீண்ட போராட்டத்திலிருந்து ஏற்பட்ட சோர்வு மற்றும் பயனற்ற நிலையைப் பற்றிப் பலர் பேசினர். வரலாற்று ரீதியாகவும் அத்துடன் நிகழ்காலத்திலும் கூட போராட்டங்களின் சுமைகளை அனுபவித்தவர்களான வடக்கைச் சேர்ந்த பலர், போராட்டங்களில் தாங்கள் இணைந்தால் தென்னிலங்கை தற்போது அனுபவித்து வருவதை விடவும் அதிக வலுவான அரச அடக்குமுறையை எதிர்கொள்ள நேரிடும் என உணர்ந்தனர். வெகுஜனப் போராட்டங்களின் பின்னணியில் ஆட்சிக்கு வந்த எவரும் தங்களை (வடக்கு மக்களை) தற்போதைய நிலையிலிருந்து வித்தியாசமாக நடத்துவார்கள் அல்லது தங்களின் நிலையை மேம்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை.

எவ்வாறெனினும், (முன்னாள்) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தாம் ஒரு பொது எதிரியாகக் கருதியதாகவும், இறுதியில் இந்த இயக்கங்களில் தமது பிரச்சினைகளும் எழுப்பப்படும் என்னும் நம்பிக்கையில் கோட்டாகோகம போராட்டத்தின் வெற்றிக்காகப் பிரார்த்தனை செய்ததாகவும் இந்தப் பிரதேசங்களில் உள்ள பல்வேறு மக்கள் தெரிவித்தனர். மே 9 ஆம் திகதி போராட்டக் களம் தாக்கப்பட்ட செய்தியைக் கேட்டு சிலர் கவலையை வெளிப்படுத்தினர். யாழ்ப்பாண நூலகம் எரிப்பு, பலர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை போன்ற தமது சமுதாயங்களுக்கு எதிரான கடந்த கால அரச அநீதிகளைக் கேள்வியெழுப்பும் செயற்பாட்டாளர்களைப் பற்றித் தாம் கேள்விப்பட்டதைக் குறித்து வேறு சிலர் கருத்துத் தெரிவித்தனர். மக்கள் போராட்டத்தின் (ஜனதா அரகலய) முன்னணியில் உள்ள இளைஞர்கள் வடக்கிற்கு வந்து தங்களின் பிரச்சினைகள் பற்றிய ஆழமான புரிதலைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும், அப்போதுதான் அதிகாரம் வாய்ந்த பதவிகளுக்கு வரும்போது அவர்களால் உண்மையான மாற்றத்தை கொண்டு வர முடியும் எனவும் அவர்கள் ஆலோசனை தெரிவித்தனர். பொலன்னறுவை, ஹிங்குராக்கொடையில் உள்ள சில சமுதாயங்கள், மக்களாகத் தங்களின் உரிமைகளுக்காக போராடும் போராட்டக்காரர்களைக் கண்டு தாம் பெருமிதம் கொண்டதாகக் கூறினர்.

மலையகத்திலும் கூட, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் போதாமை போன்ற பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பான தமது தொடர்ச்சியான போராட்டங்களுக்குத் தெற்கில் நடைபெற்ற போராட்டங்களுக்குக் கிடைத்ததைப் போன்று ஊடக கவனம் ஏன் கிடைக்கவில்லை என மக்கள் கேள்வி எழுப்பினர். பெருந்தோட்டத் துறை உரப் பயன்பாட்டின் மீது அதிகம் தங்கியிருப்பதால், 2021 ஆம் ஆண்டில் அரசாங்கம் விதித்த இரசாயன உரத் தடைக்கான எதிர்ப்பு முதன்முதலில் இந்தப் பிரதேசங்களிலேயே எழுப்பப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். ஆயினும், இத்தகைய போராட்டங்கள் ஊடக கவனத்தைக் குறைவாகவே பெற்றன.
அவர்களில் சிலர் (மலையகத்தைச் சேர்ந்தவர்கள்) கொழும்புக்கு (காலிமுகத்திடல்) சென்று காணிப்பிரச்சினை போன்றவை தொடர்பில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

உடப்புசல்லாவவில், ஏற்கனவே பெருந்தோட்ட வேலைகள் போன்ற பிரித்தெடுக்கும் இயல்பைக்கொண்ட வாழ்வாதாரங்களை நம்பியிருந்த பொருளாதார ரீதியான நிச்சயத்தன்மையற்ற சமுதாயங்கள், போராட்டங்களில் பங்கேற்றால் ஒரு நாளுக்கான வருமானத்தை அல்லது முழு வேலைவாய்ப்பை இழக்க நேரிடும் என அஞ்சியதாகத் தெரிவித்தனர். உதாரணமாக, மட்டகெல்லவில் உள்ள பெருந்தோட்டத் தொழிலாளர்கள், தொழிலாளர் உரிமைகள் தொடர்பான சில பிரச்சினைகளுக்கு எதிராகப் பேசியதற்காக அவர்களில் சிலர் எவ்வாறு தண்டிக்கப்பட்டனர் என்பதையும், இது போராடும் நபரின்/நபர்களின் சாதி அல்லது பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் கட்சி மற்றும்/அல்லது தொழிற்சங்கத் தொடர்புகளால் தீர்மானிக்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.






இந்தச் சமுதாயங்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்களுக்கு உரத்தடை ஏற்படுத்திய பாரிய பாதிப்பை ஈடுசெய்வதற்கான பொறுப்புக்கூறல் அல்லது தீர்வுப் பொறிமுறைகள் காணப்படவில்லை என இப்பகுதிகளில் வாழும் மக்கள் சுட்டிக்காட்டினர். அ மக்களின் வரிப்பணத்தால் சம்பளம் பெறும் அரச ஊழியர்களாக அரசியல்வாதிகளை நடத்துவது குறித்தும், அவர்கள் சட்டத்திற்கு மேற்பட்டவர்களாக அல்லது தங்களை அதிகாரத்திற்குத் தேர்ந்தெடுத்த மக்களை விட உயர்ந்தவர்களாக இல்லை என்பது குறித்தும் பெரும்போக்கான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என அவர்கள் அழைப்பு விடுத்தனர். மக்கள் தங்கள் அதிகாரத்தை திரும்பப் பெற வேண்டும் என அவர்கள் நினைத்தனர். பதவி விலகல்கள் மட்டுமல்லாது, பொறுப்புக்கூறல் மற்றும் நீதியும் வழங்கப்பட வேண்டும் என்பதனால், ”கோட்டா கோ ஹோம்” என்னும் வாசகத்திற்குப் பதிலாக ”கோட்டாவைப் பதவி நீக்கு” என்பதாகவே இவ்வாசகம் இருந்திருக்க வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டது. நடைமுறையில் உள்ள அரசியல் கலாசாரம் மற்றும் முறைமைசார் அரசியலின் மோசமடைந்த நற்பெயர் ஆகியவை திறமையும் நேர்மையும் உள்ளவர்கள் பொது சேவையில் நுழைவதைத் தடுக்கின்றன.

தற்போதைய நெருக்கடி தங்களின் சமூக மற்றும் கலாசார வாழ்க்கையை எவ்வாறு பாதித்தது என்பதைப் பற்றிப் பல சமுதாயங்கள் பகிர்ந்து கொண்டன. உதாரணமாக, தங்களின் நாளாந்தம் உழைத்து உண்ணும் நிலைமையின் விளைவாக, ஒரு நிறைவான மற்றும் பூரணமான வாழ்க்கைக்குத் தேவையான சமூக-கலாசார மற்றும் மத நடைமுறைகளில் ஈடுபடுவதற்கான நேரத்தை அல்லது மன சுதந்திரத்தைத் தாங்கள் கொண்டிருக்கவில்லை எனப் பலரும் கூறினர். இது சமுதாயப் பிணைப்புகளையும் பலவீனப்படுத்தியது. தேவைப்படும் நேரங்களில் ஒருவருக்கொருவர் உதவுவது எவ்வாறு வழக்கமாகக் காணப்படுகின்றது என்பதையும் ஆனால் தற்போதைய நெருக்கடி அனைவரையும் மிகவும் மோசமாக பாதித்ததன் விளைவாக, தேவைப்படுபவர்களுக்கு உதவும் நிலையில் யாரும் இல்லையென்பதையும் மக்கள் பகிர்ந்து கொண்டனர். விரைவில் பொருளாதார நிவாரணம் கிடைக்கவில்லை எனின், புலம்பெயர்ந்த தொழில்களுக்காக வெளிநாடுகளை நோக்கி வெளியேறுவது அல்லது ஆகக்குறைந்தது வாழ்வாதாரங்களுக்கான வழிவகைகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ள தங்கள் கிராமங்களை விட்டு வெளியேறுவது போன்ற பிழைப்புக்கான மாற்று வழிகளைத் தேட வேண்டிய கட்டாயத்தில் மக்கள் உள்ளனர் எனக் கூறப்பட்டது. இத்தகைய இடையூறுகளினால் ஏற்படும் சமூக இழப்புகள் மிகவும் பாரியவை.

LAW & SOCIETY TRUST
சட்டம் ரூ சமூக அறக்கட்டளை
3, கின்சி மொட்டை மாடி,
கொழும்பு 08,
இலங்கை
தொலைபேசி:¸94 (0) 11 268 48 45
தொலைநகல்;94 (0) 112 268 68 43
இணையம்: றறற.டளவடயமெய.ழசப